

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்ற முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் திருவண்ணாமலை மாநகரில் வீதி வீதியாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார். உடன் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், நிர்மலாவேல்மாறன், சீனி.கார்த்திகேயன், முகமது அனிபா, நாசர் உசேன், ராஜாராம், நதியா உட்பட பலர் உள்ளனர்.

### வேலுமணி ஆதரவு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் பெற வாய்ப்பு!

# த.வெ.க. அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் விதிமீறல்!

## கழக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் குற்றச்சாட்டு!

சென்னை, மே 17 -

த.வெ.க அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில், சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் சட்டமன்ற விதிகளை மீறியுள்ளதாக மூத்த வழக்கறிஞர் வில்சன் குற்றம் சாட்டியுள்ளார். வேலுமணி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் செய்யப்பட வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான வில்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடைபெற்ற அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 144 வாக்குகள் பெற்றதாக கூறப்படுவது சட்டப்படி தவறான கூற்றாகும் என்றும் 118 என்பது மட்டுமே



சரி என்றும் தெரிவித்துள்ளார்.

எஸ்.பி.வேலுமணி தலைமையிலான அதிருப்தி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் குழு, தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதர வாக வாக்களிக்க சட்டப்பேரவை தலைவர் அனுமதி வழங்கியது, தமிழ்நாடு சட்டமன்ற விதிகளை முற்றிலும் மீறும் செயலாகும் என்று வழக்கறிஞர் வில்சன் தெரிவித்துள்ளார். சட்டப்பேரவைத் தலைவர் சட்டமன்ற விதிகளை முறையாகப் பின்பற்றியிருக்க வேண்டும், அவசரமாக அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தியிருக்கக்கூடாது என்பதே சரியான நிலைப்பாடு என்றும் வில்சன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தலைவரின் இந்த முடிவும், அதிருப்தி உறுப்பினர்களின் வாக்குகளும் முறையான ஆதாரங்களுடன் ஆளுநரிடமோ அல்லது நீதிமன்றத்திலோ முன் வைக்கப்பட்டால், 26 அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் சட்டவிரோதமானவை என அறிவிக்கப்பட்டு, அவை செல்லாததாக அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும், வில்சன் தெரிவித்துள்ளார்.

### ஜூன் 3–ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளையொட்டி

# மாவட்டம் முழுவதும் நல உதவிகள் - கழகக் கொடி ஏற்றம் - பொதுக்கூட்டம்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்; மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, மே 17 -

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (15.5.26 வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி எண்.7, செல்லப்பா தெரு என்ற முகவரியில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், ஜோசப்சாமுவேல், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, ஆர்.வரதன், பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம்.நாதன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார்,

மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், புனிதவதி எத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன், கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், DSP.ராஜகோபால், MTR நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர். தொகுதி பார்வையாளர்கள்: என்.கிருஷ்ணமூர்த்தி, இரா.நரேந்திரன், பி.முனியாண்டி, பி.எம்.யாழினி, வழக்கறிஞர் அருண், அமுதரசன், பொதுக் குழு உறுப்பினர்கள்: டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலாதேவி, எம்.இப்ராஹிம் கனி, நந்தீஸ்வரன், ச. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: ஜெ.பாலமுருகன், க.வினோத், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, பா. ஜெகதீஷ், L.P.F. மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், P. விஜயகுமார், இரா.வீரமணி, ம. அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து.ஆயிரம், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானம்.1.**

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் பலர் வெற்றி வாய்ப்பை இழந்ததற்கு.. உடன்பிறப்புகள்.. அவர் தான் காரணம் இவர்தான் காரணம், இதை இப்படி செய்திருக்கலாம் அப்படி செய்திருக்கலாம், அது நடக்கல இது நடக்கல என்று குற்றம் கண்டுபிடித்து அடுத்தவர் மீது பழி போட வேண்டாம் என்று கழகத் தலைவர் அவர்கள் சென்னை அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பெருந்தன்மையோடு நானே இந்த தோல்விக்கு பொறுப்பேற்கிறேன் என்றுரைத்து சலசலப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த நம் கழகத் தலைவரை வணங்கி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்.2.**

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்ததற்கான காரணத்தை ஆய்வு செய்ய கழகத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழுவிற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கவும் ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளை மாவட்டம் முழுவதும் இருவண்ண கொடியேற்றியும், பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடுவது என இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பகுதிச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

### தஞ்சைத் தரணிக்கு வருகை தரும்

# கழகத் தலைவர் - எதிர்க்கட்சித் தலைவருக்கு பிரமாண்ட வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - மாவட்டப் பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன் - தி.பழநிவேல் கூட்டறிக்கை!






தஞ்சாவூர், மே 17 -

தஞ்சையில் நடைபெற உள்ள திருவாரூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் மறைந்த பூண்டி கலைச்செல்வன் இல்ல திருமண விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணியின் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பிரமாண்ட வரவேற்பு அளிக்கும் நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டி தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், தெற்கு மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாளை (18.05.2026 திங்கள்), காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர் மஹாராஜா மஹாலில் திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களுடைய சகோதரரும், கழக செயல் மறவருமான மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களுடைய மகள் கலை அழகி - ராம் பாலாஜி ஆகியோரின் திருமண விழாவை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்க தஞ்சை மாநகருக்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், தமிழ்நாடு எதிர்க் கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வரவேற்கும் வகையில் இன்று (17.05.2026 ஞாயிறு) மாலை 5.00 மணியளவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நுழைவு வாயிலில் பிரமாண்ட வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மற்றும் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ஒன்றிய, மாநில அமைச்சர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகரச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், தி.பழநிவேல் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

### அமெரிக்கா – ஈரான் போரை காரணம் காட்டி

# பெட்ரோல், டீசல் விலையை ஒன்றிய பா.ஜ.க. அரசு உயர்த்தியது!

## மக்கள் அதிர்ச்சி — விலைவாசி உயரும் அபாயம்!

புதுடெல்லி, மே 17 –

நாடு முழுவதும் பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் 14 காசுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விலை உயர்வு மூலம், சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 103 ரூபாய் 98 காசுகளாக அதிகரித்துள்ளது. டீசல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் 11 காசுகள் உயர்ந்து, 95 ரூபாய் 47 காசுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்திருந்தபோது, பெட்ரோல், டீசல் விலையை ஒன்றிய அரசு குறைக்கவில்லை.

எரிபொருள் விலை குறைவாக இருந்தபோது, அதன் பலனை ஒன்றிய அரசு மக்களுக்கு வழங்கவில்லை. அமெரிக்கா – ஈரான் போர் காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது.

5 மாநில தேர்தல் காரணமாக பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தாமல் இருந்த ஒன்றிய அரசு, தற்போது தேர்தல் முடிந்த பிறகு, எரிபொருள் விலையை உயர்த்தி மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

எரிபொருள் விலை மலிவாக இருந்தபோது, அதன் லாபத்தை கொள்ளையடித்த ஒன்றிய அரசு, தற்போது விலை உயர்வை மட்டும தங்களது தலையில் சுமத்துவதா? என்று வாகன ஓட்டிகளும், பொது மக்களும் கோபத்துடன் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

### த.வெ.க. அரசில் குதிரை பேரம் இல்லை என்பதை உறுதிப்படுத்துவீர்!

# முகமூடியோடு வந்த நபர் யார்? முதலமைச்சர் சொல்ல வேண்டும்!

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேட்டி!

சென்னை, மே 17 -

தமிழ்நாடு அரசில் குதிரைபேரம் நடைபெறவில்லை என்பதை உறுதிப் படுத்த, முகத்தை மூடிக்கொண்டு சந்திக்க வந்த நபர் யார் என்பதை முதலமைச்சர் விஜய் தெளிவுபடுத்த வேண்டும் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ., வலியுறுத்தியுள்ளார்.

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்எல்ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில், மறைமுக அரசியல் அல்ல,



வெளிப்படையான ஆதரவே மக்களின் நம்பிக்கை என தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசில் எந்த வித குதிரைப் பேர அரசியலும் இல்லை என்பதை முதலமைச்சர் விஜய் தெளிவுபடுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ள அவர், மதச்சார்பற்ற வெற்றி கூட்டணியை சேர்ந்தவர்கள் எவ்வாறு நிபந்தனை இல்லாத ஆதரவு' என்று வெளிப்படையாக தெரிவித்தார்களோ, அதே போல் அ.தி.மு.க. வில் இருந்து பிரிந்து வந்தவர்களும் தங்களின் ஆதரவை எந்தவித நிபந்தனையும் இல்லாமல் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்றும், அப்போது தான் குதிரைப் பேரம் நடைபெறவில்லை என்பதை மக்கள் நம்புவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், முதலமைச்சர் விஜயை சந்திக்க முகத்தை மூடிக்கொண்டு வந்த நபர் யார் என்பதை விஜய் தெளிவுபடுத்த வேண்டும் என்றும், அதற்கு பின்பு எந்தவிதமான குதிரை பேரமும் நடக்கவில்லை என்பதை, மக்களுக்கு முதலமைச்சர் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்றும் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. வலியுறுத்தியுள்ளார்.

# மணிப்பூரில் கிறிஸ்தவப் பாதிரியார்கள் 3 பேர் சுட்டுக்கொலை!

இம்பால், மே 17 -

மணிப்பூரில் கிறிஸ்தவ பாதிரியார்கள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது.

மணிப்பூரில் கடந்த 2023 ம் ஆண்டு மெய்தி, குக்கி சமூகத்தினரிடையே ஏற்பட்ட இன மோதல் தற்போது வரை நீடித்து வருகிறது. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை காங்போக்பி மாவட்டத்தில் ஆயுதமேந்திய கும்பல் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கிறிஸ்தவ பாதிரியார்கள் மூன்று பேர் பலியாகினர். 4 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலைக் கண்டித்தும், வன்முறை சம்பவங்களை தடுக்க வலியுறுத்தியும் மணிப்பூரில் உள்ள 3 மாவட்டங்களில் ஒருநாள் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. குக்கி பழங்குடியினத்தின் குக்கி இன்பி என்ற அமைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

குக்கி மற்றும் நாகா பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் காங்போக்பி, சுராசந்த்பூர் மற்றும் சண்டேல் ஆகிய மாவட்டங்களில் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது.

இதன் காரணமாக கடைகள், சந்தைகள், வணிக நிறுவனங்கள் அடைக்கப்பட்டிருந்தன. பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்தின்றி சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன.

### மீண்டும் ஒரு நிர்பயா சம்பவம்:

# டெல்லியில் ஓடும் பேருந்தில் பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமை!

## பா.ஜ.க. ஆளும் டெல்லியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு!

புதுடெல்லி, மே 17 -

பா.ஜ.க. ஆளும் டெல்லியில் ஓடும் பேருந்தில் பெண் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லி பிதம்புரா குடிசைப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், மங்கோல்புரியில் உள்ள ஒரு தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறார். கடந்த 11ம் தேதி இரவு, அவர் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். அப்போது, சரஸ்வதி விஹார் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நின்றுள்ளது.

அப்போது அந்த பெண்ணை வலுக்கட்டாயமாக பேருந்துக்குள் இழுத்து சென்று பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு திருமணமாகி மூன்று குழந்தைகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட பெண் புகார் தெரிவித்தையடுத்து, குற்றம் சாட்டப்பட்ட ஓட்டுநர் மற்றும் நடத்துநர் ஆகியோரை போலீசார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். பா.ஜ.க. ஆளும் டெல்லியில் நாளுக்கு நாள் குற்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.